செ.வெ.எண்: நாள்: 23.12.2021

**விருதுநகர் மாவட்டம்**

**மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

---

விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்ட பல்வேறு பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.12.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விருதுநகரில் ரூ.309.10 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிட பணிகளையும், கூரைக்குண்டு ஊராட்சி கோட்டைபட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் ரூ.17.91 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வரத்து கால்வாய் பணிகளையும், பிரதம மந்திரி ஆகாஷ் யோஜனா திட்டத்தின் கீழ், செவல்பட்டி கிராமத்தில் ரூ.1.70 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டப்பட்டுவரும் பணியினையும், கோட்டநத்தம் ஊராட்சியில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ், ரூ.220.65 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ள சத்திரம் முதல் மேலமடை வரையிலான சாலைப்பணிகளையும், கோட்டநத்தம் ஊராட்சி தொடக்கப்பள்ளியில் ரூ.9.85 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் அங்கன்வாடி மைய புதிய கட்டிடப்பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், கோட்டநத்தம் ஊராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கல்வியின் தரம் குறித்தும், பள்ளி கட்டிடத்தின் தன்மை குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திருமதி திலகவதி, செயற்பொறியாளர் சக்தி முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சாந்தி , திரு.போத்திராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**